எங்கும் தமிழ் மணக்க
தங்கி நிற்கும் மகிழ்விருக்க
பொங்கும் அறிவு மகள் வருகிறாள் 2

சங்கம் வளர்த்த தமிழ் தாயின் அழகுமகள்
எங்கள் ஈழமகள் வருகின்றாள் 2

எங்கும் தமிழ் மணக்க

விலங்கை உடைத்தெறிந்து விண்ணதிரப் போராடிய
களங்கம் துடைத்த புலி வாழ்த்தொலிக்க 2
கோலம் போட்டிடுவோம் குத்துவிழக்கேற்றிடுவோம்
காலம் இது நமது காலமடி 2

எங்கும் தமிழ் மணக்க

சதங்கை மணி ஒலித்து சங்கீதத் தமிழ் இசைத்து
சாவை அணைத்த புலி தனை வாழ்த்தி
பாடல் புனைந்திடுவோம்
பாசம் தனை பொழிந்திடுவோம்
நாசம் இனி நமக்கு இல்லையடி

எங்கும் தமிழ் மணக்க